யிலே மதுரைப் பல்கலைக் கழகம் விளங்கவேண்டுமென்பதுதான் என்னுடைய அவா. மற்றொரு அவா என்னவென்றால், விஞ்ஞான ஆராய்ச்சியில் மதுரைப் பல்கலைக் கழகம் சிறப்புறவேண்டும் என்பது. இப்பொழுது ஆரம்பப்பள்ளிகளிலே விஞ்ஞானம் போதிய அளவில் இல்லை. அங்கே நல்ல முறையில் இது புகுத்தப்படவேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலும் விஞ்ஞானம் போதாது. இன்னும் அதிகமாக உயர்நிலைப் பள்ளிகளிலும் புகுத்தப்படவேண்டும். அதற்கேற்ற வகையில் உயர் கல்வி நிலையிலும் புகுத்தப்படவேண்டும். இந்த வகையில் அரசாங்கம் முயற்சி செய்துகொண்டு வருகிறது. ஆகவே, விஞ்ஞான ஆராய்ச்சி மிகவும் முக்கியமானது என்றாலும், அதிலும் குறிப்பிட்ட சில விஞ்ஞானத் துறைகளில், விவசாயத்தைப் போன்று, இரசாயனத்தைப் போன்று,—மதுரைப் பல்கலைக் கழகம் சிறந்த ஆராய்ச்சியை நடத்தி உலகத்திலேயே தலைசிறந்த—குறிப்பிட்ட சில விஞ்ஞானப் பகுதிகளிலாவது—பல்கலைக் கழகமாக, உலகத்திலே உள்ளவர்கள் எல்லோரும் போற்றக்கூடிய அளவுக்கு விளங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. இந்தப் பல்கலைக் கழகம், பல்கலைக் கழகம் என்பதோடு, ஒரு சில குறிப்பிட்ட துறைகளிலே சிறப்பையளிக்கக்கூடிய வகையிலே விளங்குமென்று நான் நம்புகிறேன். முக்கியமாக, இந்த மன்றத்திலே உள்ள கனம் உறுப்பினர்கள் எவ்வளவு தூரம் எதிர்பார்க்கின்றார்களோ, அதற்கு ஏற்றவகையில் சிறந்ததொரு பல்கலைக் கழகமாக விளங்குமென்று நான் நம்புகிறேன். மீண்டும் இந்த மன்ற உறுப்பினர்களின் வரவேற்பிற்கும், ஆதரவிற்கும், ஒத்துழைப்பிற்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொண்டு நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madurai University Bill, 1965 (L.A. Bill No. 11 of 1965), as amended, be passed."

The motion was put and carried, and the Bill, as amended, was passed.

(5) THE MADRAS PANCHAYATS (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI G. BHUVARAHAN: Sir, I introduce the Madras Panchayats (Amendment) Bill, 1965 * and move—

"That the Bill be taken into consideration."

Hon. Members are aware that the levy of house tax by panchayats is compulsory under the Madras Panchayats Act, 1958 and this is a major source of revenue to the panchayats. Under the present procedure of levying the house tax once in every half year, there is some procedural difficulty. The period of limitation for the recovery of taxes and other sums due to panchayats and panchayat union councils either by distraint or by suit or by prosecution is restricted to three years under the provision in the

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 18th August 1965.

5th November 1965] [Sri G. Bhuvarahan]

present Act. With a view to improve the procedure for levying and effectively collecting Panchayat taxes, the Government have decided to introduce a Bill containing a few amendments to the present Act.

The following are the salient features of the Bill :—

(1) Under the Madras Panchayats Act, 1958, house tax is being levied every half year. Clauses 4 and 6 of the Bill seek to make the levy *annual.*

(2) Under Section 165 of the Madras Panchayats Act, 1958, the period of limitation for the recovery of any tax or other sum due to a Panchayat or Panchayat Union Council either by distraint or by suit or by prosecution is three years. The question of preventing the arrears of taxes from lapsing after a short period has been engaging the attention of the Government for sometime past. After careful consideration, the Government have come to the conclusion that in the interest of the finances of the Panchayats and Panchayat Union Councils, the period of limitation should be extended from three to six years with retrospective effect from the date when the first batch of Panchayat Unions was constituted. Clauses 5 and 1 (2) (*b*) of the Bill provide for this. The revival of the liability to pay the taxes and other sums due to the Panchayats and Panchayat Union Councils which have been barred by limitation with reference to the existing provision of the Madras Panchayats Act requires validation by a special provision in the statute to enable the Panchayats and Panchayat Union Councils to take coercive proceedings in such cases also. Clause 7 of the Bill provides for this.

(3) According to the rules made under the Madras Panchayats Act, 1958, the issue of demand notices every half year is necessary for collection of taxes. This involves lot of scriptory work. In order to reduce the work involved, the Government consider that provisions for the issue of bills or notices of demand may be restricted to cases where coercive action becomes absolutely necessary. For this purpose, the Government propose to amend relevant rules under the Madras Panchayats Act, 1958. If the rules are so amended, then consequential amendments will be necessary to Sections 25 (2) (*g*) and 26 (*i*) of the Act which refer to issue of bill or notice. These consequential amendments have been provided for in Clauses 2 and 3 of the Bill.

With these words, Sir, I commend the Bill for consideration of this House.

MR. DEPUTY SPEAKER : Motion moved—

"That the Madras Panchayats (Amendment) Bill, 1965 be taken into consideration."

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் உதவிச் சபாநாயகர் அவர்களே, இந்தமசோதாவை இந்த ரூபத்திலே இப்படிக் கொண்டு வரவேண்டிய அவசியம் இல்லையென்பது என்னுடைய அபிப்பிராயம். கிராமக் கணக்குப் பிள்ளைக்கு இருக்கக் கூடிய கஷ்டத்தை மட்டும் மனத்தில் வைத்துக் கொண்டு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதிலிருந்து ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி ஆராய்ந்து இந்த மசோதாவைக் கொண்டு வரவில்லை.

1-00 p.m.

முக்கியமாக, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் நகரப் பஞ்சாயத்துகளுக்கும் வருமானத்திற்கு முக்கியமான ஆதாரம் வீட்டு வரி. கிராமப் பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட மட்டில் வீட்டு வரி வசூலிப்பதில் ஒரு அனுகூலம் இருக்கிறது. வீட்டு வரியின் மூலம் முக்கியமாக வருமானம் வரும் என்பதோடு மட்டுமல்லாமல், எந்த அளவுக்கு வீட்டு வரி வசூலிக்கிறார்களோ, அந்த அளவுக்கு அரசாங்கம் மானியம் கொடுக்கிறது என்ற காரணத்தால் வீட்டு வரி வசூலிப்பதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பது பஞ்சாயத்துக்களின் நோக்கம். ஏன் ஆறு வருஷ பாக்கியை வசூல் செய்ய வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டது? ஆறு வருஷ காலமாக வரியை வசூல் செய்யாமல் யார் விட்டு வைத்தார்கள்? கிராமாதிகாரிகளிடம் இந்த அதிகாரத்தை விட்டு வைத்திருந்தால் தான் இந்தச் சங்கடங்கள் ஏற்பட்டன என்பது என்னுடைய அபிப்பிராயம். இது பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருக்க வேண்டுமென்று கொண்டு வந்திருந்தால், சரியான பரிகாரம் கொண்டு வந்திருப்பதாகச் சொல்ல முடியும். கிராமக் கணக்குப் பிள்ளை பல வேலைகளோடு டிமாண்டு நோட்டீஸையும் எழுத வேண்டும்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப் போல் இந்த அதிகாரத்தைப் பஞ்சாயத்து யூனியனிடத்திலோ அல்லது தலைவரிடத்திலோ கொடுத்தால் இதிலே பாதி கூட வசூலாகாது என்பது என்னுடைய அச்சம். வோட்டுக் கேட்கக் கூடியவர்கள் கண்டிப்பாக வசூல் செய்ய முடியாது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அது எப்படி நடக்கிறது என்று பார்க்கலாம். செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்து வரி கொடுக்க வேண்டுமென்று மக்களைக் கேட்டால் மக்கள் கொடுப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. எப்படிச் சுரண்டலாம் என்று நினைத்துப் போகக் கூடிய தலைவர்கள் வசூலிக்க முடியாது. ஆனால் தலைவர்களாலேயே வசூலிக்க முடியாது என்றால் கிராமக் கணக்குப் பிள்ளைகளால் வசூலித்து விட முடியுமா? கணக்குப் பிள்ளை டிமாண்டு நோட்டீஸ் எழுதுகிறார். வசூலிப்பது மணியக்காரர். மணியக்காரர் சரிவர வசூலிப்பது இல்லையென்று சிலரை சஸ்பெண்டு கூடச் செய்து பார்த்தார்கள். அவர்கள் சஸ்பென்ஷனைக் கான்சல் செய்ய அவர்கள் எங்கிருந்தாவது 300 ரூபாய், 500 ரூபாய் என்று வாங்கிக் கட்டி விடுகிறார்கள். பஞ்சாயத்து நிதி

5th November 1965] [திரு. மீ. கலியாண சுந்தரம்]

வசதியை எப்படிப் பெருக்குவது என்பதிலே அடிப்படையாக ஆராய்ச்சி செய்யவேண்டும். பஞ்சாயத்து வருமானத்தை விஸ்தரிப்பு செய்வதற்கு தனி இலாகாவை ஏற்படுத்தி ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் போட்டு, பில் கலெக்டர்களை ஐந்தாறு பஞ்சாயத்துக்களுக்குச் சேர்த்துப் போடுவார்களானால், நிச்சய மாக வரியை வசூல் செய்ய முடியும்.

வரி சரியானபடி விதிக்கப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. எத்தனையோ கிராமங்களில் வீட்டு வரி சரியானபடி விதிப்பதில்லை; வண்டி வரி விதிப்பதில்லை; ப்ராபஷன் டாக்ஸ் விதிக்கப்படுவ தில்லை. இதற்கான பொறுப்பைப் பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்க வேண்டுமே தவிர, கமிஷனருக்குக் கொடுப்பதால் பயன் இல்லை. கமிஷனர் ஏதோ அபிவிருத்தி காட்ட வேண்டுமென்பதற் காக இருக்கிறார். ஆகவே, இந்தப் பொறுப்பை மாற்றுவதைப் பற்றி யோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரி விதிப்பைப் பொறுத்து பஞ்சாயத்து தீர்மானம் போட வேண்டும். பல பஞ்சாயத்துக்களுக்கு எப்படி வரி விதிக்க வேண்டு மென்பதே தெரியாது. கம்பெனிகளுக்கு ப்ரொபஷன் டாக்சாக 125 ரூபாய் போடலாம். எந்த பிசினஸ் செய்தாலும் ப்ரொபஷன் டாக்ஸ் போடலாம். பள்ளிக்கூட ஆசிரியருக்கு இரண்டு ரூபாய் ப்ரொபஷன் டாக்ஸ் போடுகிறார்கள்; மளிகைக் கடை வியாபாரி களுக்கு ப்ரொபஷன் டாக்ஸ் போடக்கூடாதா? எத்தனை பஞ்சாயத்துக்கள் இந்தமாதிரி ப்ரொபஷன் டாக்ஸ் போட்டிருக் கிறது? ரயில்வே காங்மென் தன் எல்லைக்குள் குடியிருக்கிறார்கள் என்பதற்காக ப்ரொபஷன் டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். ஆனால் வெல்ல ஆலையில் லாபம் சம்பாதிக்கிறவர்களுக்கு ப்ரொபஷன் டாக்ஸ் போடுகிறார்களா என்றால் இல்லை. வருமானத்தை அபிவிருத்தி செய்ய வரி விதிக்கும்போது நியாயமான முறையில் யாருக்கு விதிக்க வேண்டுமோ அவர்களுக்கு விதித்து வசூலிக்க வேண்டும். இந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கக் கூடிய வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வாகனங்கள் வரி ஆகியவற்றை நியாய மான முறையில் விதித்து ஒழுங்காக வசூலித்தாலே பஞ்சாயத்து நிதி ஆதாரம் இன்னும் அபிவிருத்தி அடையும். இந்தச் சட்டம் அதற்குத் தக்கபடி அமலுக்கு வரவில்லை.

வீட்டு வரி பாக்கி இருப்பதற்குக் காரணம் எழுதித் தள்ளாதது என்று நினைத்து ஆறு வருஷத்திற்குப் பாக்கி வசூல் செய்ய வேண்டு மென்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆறு வருஷ கால பாக்கியை வசூல் செய்ய வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கட்டும்; ஆனால் நிரந்தரமாக எதிர்காலத்திலும் ஆறு வருஷ கால பாக்கியை வசூல் செய்யலாம் என்று திருத்திவிட்டால் இப்போது வசூலாகும் அளவு கூட காலத்தில் வரி வசூலாகாது. இப்படிச் செய்து விட்டால் வருஷா வருஷம் வசூல் செய்ய வேண்டுமென்பதற்கான பொறுப்பு எப்படி ஏற்பட முடியும்? நிர்ப்பந்தம் இருந்தால்தான் காலத்தில் வசூலிக்க முடியும். அதோடு கூட, ஆறு மாதத்திற்கு ஒரு முறை வரி வசூல் செய்ய நோட்டீஸ் கொடுக்க வேண்டுமென்றிருந் ததை ஒரு வருஷத்திற்கு ஒரு முறை என்றும் திருத்தம் கொண்டு

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [5th November 1965

வந்திருக்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்குத்தான் கஷ்டம். விவசாயிகள் நில வரி கட்டும் சமயத்தில் வீட்டு வரியும் கட்ட வேண்டியிருக்கும். திருச்சி, சேலம், கோவை போன்ற நகரங்களைச் சுற்றி இருக்கும் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முதலிலே டிமாண்டு கொடுத்து விடுவார்கள். முழுவதும் கட்ட வேண்டுமென்று இல்லை. பாதியோ அல்லது கொஞ்சம் கொஞ்சமாகவோ கட்டலாம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : சட்டத்திலே அப்படி இல்லை; விதிகளிலே அப்படி எழுதப் போகிறார்களோ என்னவோ தெரியாது. எழுத்து மூலம் வந்திருக்கக்கூடிய சட்டத்திலிருந்துதான் நான் பேச முடியும். அப்படியே இருந்தாலும் ஒரு சங்கடம் இருக்கிறது. வருஷத்தில் ஒரு தரம் டிமாண்டு நோட்டீஸ் கொடுத்து ஒரே வருஷத்தில் கட்ட வேண்டுமென்ற நிலைமை ஏற்படும். தொழிலாளர்கள் மொத்தமாகக் கொடுப்பது கஷ்டம். டிமாண்டு நோட்டீஸ் எழுதுகிற வேலை குறையும் என்ற ஒரே காரணத்திற்காக ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்று இருந்ததை ஒரு வருஷத்திற்கு ஒரு முறை என்று மாற்றுவதற்கு முன்வருகிறார்கள். ஆறு மாதத்திற்கு ஒரு முறை நோட்டீஸ் கொடுத்தால் பஞ்சாயத்துக்கு வரி கட்ட வேண்டுமென்ற உணர்வை உண்டாக்க முடியும். அதை ஒரு பெரிய கஷ்டம் என்று நினைக்க வேண்டியதில்லை. பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலுள்ளவர்கள், மற்றும் வேறு பல குமாஸ்தாக்களை பயன்படுத்தி நோட்டீஸை எழுதி வைக்க முடியும். அதற்கு அவகாசமும் இருக்கிறது ; ஊழியர்களும் இருக்கிறார்கள். முனிசிபாலிடியில் எப்படி டெம்பரரி க்ளார்க்குகளைப் போடுகிறார்களோ அதேபோன்று காண்டிராக்ட் ரேட்டில் கூட டிமாண்டு நோட்டீஸ் எழுதச் செய்யலாம். அந்தமாதிரி எழுதி அனுப்புவதில் அதிகப்படியான செலவு ஏற்பட்டாலும் நியாயமாக இருக்கும். வருஷம் ஒரு முறை என்று மாற்றுவதால் பஞ்சாயத்து வருமானம் காலதாமதமாகும். பட்ஜட் அமைப்பு கஷ்டமாகும். பட்ஜட் போட்டுத்தான் செலவு செய்யக்கூடிய நிலை இல்லை என்பது வேறு விஷயம். அரசாங்க மானியத் தொகை பின்தங்கி வரும். இதனால் பஞ்சாயத்துக்கே பல சங்கடங்கள் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கத்திற்கு வேண்டுமானால் மான்யத்தை ஒரேயடியாகக் கொடுத்து விடலாம் என்ற வசதி ஏற்படலாம். ஆனால் இது பஞ்சாயத்துக்களின் வசதிகளைப் பெருக்கும் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பது சந்தேகமாக இருக்கிறது. விளைவு என்னவாகும் என்று கவலைப்படாமலேயே டிஸ்க்வாலிபிகேஷன் விஷயத்திலும் கொண்டு வந்து விட்டார்கள். டிமான்ட் நோட்டீஸ் அவசியமில்லை வசூல் செய்வதற்கு, ஒவ்வொருவரும் வரி பாக்கி எவ்வளவு இருக்கிறது என்று உணர்ந்து செலுத்தவேண்டும், இல்லாவிட்டால் தேர்தலுக்கு நிற்க முடியாது, இப்படியே இது அமலுக்கு வந்து நடந்தால் அடுத்த பஞ்சாயத்து பொதுத் தேர்தலின்போது எவ்வளவு பேர்கள் தகுதி உடையவர்களாக இருப்பார்

5th November 1965] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

கள் என்று சொல்லமுடியாது. முந்திய ஆண்டு பாக்கியுள்ள தொகையை கட்டாமல் இருந்தால் தேர்தலில் நிற்பதற்கு தகுதி யற்றவராகி விடுவார் என்று சட்டம் இருக்கிறது. ஒருவர் சைக்கிள் வைத்திருப்பார், அவருக்கு டிமான்ட் நோட்டீஸ் அனுப்பாமல் இருக்கலாம். வேண்டுமென்றல்ல, அவர் அதைக் கட்ட தவறியிருக் கலாம். அல்லது ஒருவர் மூன்று ஆண்டுகள் இரட்டை மாட்டு வண்டி வைத்திருந்து வரி கட்டத் தவறியிருக்கலாம். அவர்களை டிஸ்க்வாலிபை செய்து விட முடியும். இப்படி ஊரில் பாதிக்கு மேல் டிஸ்க்வாலிஃபைட் லிஸ்டில் சேர்த்து விட முடியும். ஒரு சிலர் மட்டும் பணம் கட்டி தேர்தலுக்கு நிற்கத் தயாராயிருக்கலாம். அப்போது அவர்கள் மட்டும்தான் தேர்தலுக்கு நிற்க முடியும் என்கிற நிலை ஏற்படுகிறது. மெம்பராக வந்து மூன்று மாத காலம் வரை வரி பாக்கி செலுத்தாமல் இருந்தால் அவர் மெம்பர்-ஷிப் போய் விடும். நோட்டீஸ் கொடுக்கவேண்டிய காலத்தில் டிமான்ட் நோட்டீஸ் எழுதி அந்த வீட்டில் கொண்டு ஒட்டியதாக சாட்சிகள் தயார் செய்து பின் அதைக் கிழித்து எறிவார்கள், சிலர். மூன்று மாதத் தவணை தீர்ந்து விட்டால் மெம்பர்ஷிப் போய் விடும். புதிய சட்டத்தில் கோர்ட்டுக்குப் போகும் பொறுப்பு பஞ்சாயத் துக்கு இருக்கிறது. பழைய சட்டத்தில் அந்தப் பொறுப்பு கிடை யாது. அப்படி பல சம்பவங்கள் நடந்தது நமக்குத் தெரியும். டிமான்ட் நோட்டீஸ் கொடுக்கவேண்டியதில்லை, டிஸ்க்வாலிபிக்-கேஷன் ஆகலாம்; அதைத் தெரிவிக்க வேண்டியதில்லை, டிஸ்க்வாலி பிக்கேஷன் ஆகலாம். தேர்தல்கள் நடந்து அதனால் ஏற்பட்ட குழப்பங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. அதோடு இந்த அதிகார மும் கொடுத்தால் ஆகாத மெம்பர்களுக்கு எப்படி சீட்டுக் கொடுக் கலாம் என்பதில்தான் தலைவர் கவனம் செலுத்துவார். அபிவிருத்தி வேலைகள் ஒன்றும் நடைபெறாது. இது பஞ்சாயத்தில் ஒற்றுமை ஏற்படுத்துவதற்குப் பதில் ஆகாதவர்களை ஒழித்துக் கட்டலாம் என்பதற்கு இந்தச் சட்டம் வகை செய்து கொடுத்திருக்கிறது. டிமான்ட் நோட்டீஸ் எழுதாமல் வேலைப் பளுவைக் குறைத்துக் கொள்ளலாம் என்று அணுகப் போய் விளைவைச் சிந்திக்காமல் இந்தச் சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பது என் அபிப் பிராயம். வீட்டு வரி ஆண்டுக்கு ஒரு முறை செலுத்த வேண்டுமென்று வந்தால் கிராமப் பஞ்சாயத்துக்கள், நகரப் பஞ்சாயத்துக்கள் இவற்றில் உள்ள தொழிலாளர்களுக்கு, விவசாயி களுக்கு மிகுந்த கஷ்டம் ஏற்படும், இதனால். பஞ்சாயத்து நிதி வசதியை எப்படிப் பெருக்குவது என்பதைப் பற்றி பரிசீலனை செய்ய அவசியம் இருக்கிறது. ஆனால் இந்த மசோதா எந்தவித நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேறாது. ஆகவே இதை வற்புறுத்த வேண்டாம். இப்போது இதை நிறைவேற்ற வேண்டாம். இதில் தலை ஒன்றும் மூழ்கி விடப் போவதில்லை. இந்த சபையில் இருந்து ஒரு சிறிய கமிட்டி அமைத்து விவாதிக்கட்டும் அல்லது பஞ்சாயத்து கன்சல்டேட்-டிவ் கமிட்டியில் வைத்து பரிசீலனை செய்யலாம். என்னென்ன திருத்தங்கள் வேண்டுமென்று அவற்றின் அவசியத்தைப் பற்றி விவாதிக்கலாம். கணக்குப்பிள்ளைகளின் தொந்தரவு சகிக்கமாட்டா

மல் இதை ஒத்துக் கொண்டிருக்கிறுர்கள். நான் கூறிய ஆலோசனை களைக் கவனிக்கவேண்டும். இந்த சபையில் ஒரு கமிட்டி போட்டு பரிசிலிக்கலாம். ஆறு மாதம் என்று மாற்றினல் எத்தகைய ஆபத்தும் வந்துவிடாது என்று கூறி இந்த மசோதாவை இப்போது கொண்டு வந்து நிறைவேற்றுவது நியாயம் அல்ல என்று கூறிக் கொள்கிறேன்.

*திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உதவித் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக் கிற இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். எனக்கு முன் பேசிய திரு. கலியாணசுந்தரம் அவர்கள் கொடுத்த விளக்கம் போல் பஞ்சாயத்து தீர்வை செலுத்தவேண்டியதில் நடைமுறையில் ஒரு ஆண்டுக்கு ஒரு தடவை என்று நிர்ணயிக்கும்போது அதை மொத்தமாக வசூலிப்பதில் கஷ்டம் இருக்காதா என்ற சந்தேகம் அவர்களுக்கு ஏற்பட்டது போல் எனக்கும் எழுந்தது. ஆனல் அதற்கு ஆறுதலான பதில் தந்திருக்கிறுர்கள் முதல் அமைச்சர் அவர்கள். ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வசூலிக்கப்படுகிறது. விதிகள் செய்கிறபோது அதை இன்னும் கூட தாராளமாகச் செய்து 2, 3, 4 தவணைகளில் கூட வசூலித்துக் கொள்ள ஒரு ஏது வருமானல் இதுமாதிரி ஆட்சேபணைகள் பண்ண அவசியம் இருக்காது என்று நான் கருதுகிறேன். வீட்டு வரி செலுத்துவது என்பது பிரஜை யாராக இருந்தாலும் சரி, குடிசையில் வாழ்பவராக இருந்தாலும் சரி ஒரு அடிப்படையான உரிமை அது. குறைந்தபட்ச வரி இவ்வளவு, அதிகபட்ச வரி இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. அதுபற்றி புகார் செய்ய அவசியம் ஏற்படாது. தீர்வை செலுத்துவது என்பது ஒரு உரிமை என்றலும் அது ஒருபுறம் கடமையும் ஆகிறது. மூன்று வருடங்கள் கடந்து விட்டால் வசூலிப்பதற்கு முடியாது என்ற நிலையை மாற்றி ஆறு வருடத் தவணை கொடுத்திருப்பதும் நியாயமே. வரி செலுத்தாது போகா மல் அதைக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பம் நீடித்துக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதில் இருக்கக் கூடிய நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி கூற விரும்புகிறேன். வீட்டு வரி நிர்ணயிக்கும்போது வீட்டுக் குரிய மூலதன மதிப்பைப் பார்த்து அதன் கீழ் இதுவரை நிர்ணயிக் கப்பட்டு வந்ததுண்டு. இப்போது எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் பெரும்பாலும் அமுலுக்கு வந்திருக்கக்கூடியது, வருடாந்திர மதிப்பு அல்லது ரென்டல் பேஸிஸ், என்றளவில்தான். ரென்டல் பேசிசில் நிர்ணயித்து வந்திருக்கிறுர்கள். வாடகை மதிப்பு அல்லது வருடாந்திர மதிப்பீடு இதன் கீழ் வரி நிர்ணயிக்கலாம் என்று ஒரு அடிப்படையை வகுத்துக் கொடுத்தாலும் கூட நிர்வாகத்தில் உள்ளவர்கள் சிலயிடங்களில் அதிகமாகவும், குறை வாகவும் வரி நிர்ணயிப்பது சிலயிடங்களில் தென்படுகிறது. இது பலவித புகார்களுக்கும் மன மாச்சரியங்களுக்கும் இடம் தருகிறது. ஆகவே எல்லோருக்கும் நியாயம் கிடைக்கக்கூடிய அளவிற்கு அந்த அடிப்படையை அமைத்துக் கொடுப்பதில் அரசாங்கமும், அதிகாரி களும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றென்று, வீட்டு வரியை அடிப்படையாக வைத்துக் கொண்டு பெரும்பாலான இடங்களில், கிராமப் பஞ்சாயத்துக்கள் உள்பட,

5th November 1965] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

தண்ணீர் வரி வசூலிக்கும் நிலைமை இருக்கிறது. எட்டு அணு வீட்டுத் தீர்வை என்றால் சென்ட் பெர் சென்ட் போட்டாலும் தண்ணீர் தீர்வை எட்டணுதான் ஆகிறது. வீட்டு வரி 10 ரூபாய் என்றால் தண்ணீர் வரியாக பத்து ரூபாய் வசூலிக்கப்படுகிறது. இந்த அடிப்படையை மாற்றி வேறு எந்த விதத்தில் இதை நிர்ணயிக்க முடியும் என்பதை பரிசீலனை செய்யவேண்டும். இது போன்ற சிறிய சட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டிய தில்லை. பஞ்சாயத்துக்களில் நடைமுறையில் உள்ள பல்வேறு சிக்கல்களைத் தீர்க்க பூர்ணமான ஒரு சட்டம் அவசியம். தேர்தல்கள் நடந்திருக்கின்றன. இந்தச் சட்டம் எந்தளவிற்கு நடைமுறையில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது, நடைமுறையில் உள்ள சிக்கல்கள் யாவை என்றெல்லாம் பார்த்து பூர்ணமான ஒரு சட்டத்தை காலாகாலத்தில் கொண்டு வரவேண்டும். மூன்று மாத காலத்திற்குள்ளாக பாக்கிகளை செலுத்தாமல் இருந்தால் அது ஒரு டிஸ்க்வாலிபிக்கேஷனுகும் என்பது கடுமையான பிரிவு. எனக்கு தெரிந்த சில விபரங்களை எடுத்துக்கொண்டால், ஒரு இடத்தில் ஒருவரின் ஒரு மரம் பாதையில் விழுந்துவிட்டதாகவும் அதை அப்புறப்படுத்த பஞ்சாயத்து இரண்டு ரூபாய் செலவிட்டதாகவும் அதைச் செலுத்துமாறு தபால் ஒன்று அனுப்பப்பட்டது. தபால் கவரில் வெற்றுப் பேப்பர் இருந்ததாக சம்பந்தப்பட்டவர் உடனே தந்தி மூலம் பஞ்சாயத்துக்குத் தெரிவித்து விட்டார். பின்னால் ஆறு மாதங்கள் கழித்து அந்த குறிப்பிட்ட நபர் போட்டியிடும் போது, அவர் இரண்டு ரூபாய் செலுத்த தவறியிருக்கிறார் என்று சொல்லி பஞ்சாயத்து தலைவர் அவரை நீக்கிவிடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பின்னால் இதற்கு கோர்ட்டில் போய்தான் நிவாரணம் காண வேண்டும். இப்போது ஜில்லா அதிகாரிகள் லெவலில் இதற்கு நிவாரணத்தைத் தேடிக்கொள்ள முடியும் என்ற நிலை இருந்தாலும் கூட, பஞ்சாயத்தில் தலைவர்கள் தவறாக நடந்து கொள்வதற்கு இடம் இருக்கிறது. சட்டம் இதற்கு இடம் தந்திருந்தாலும் கூட, தவறுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளுகின்ற முறையில் முளையிலேயே இதை கிள்ளியெறியக்கூடிய வகையில் இதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகும். கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் சுட்டிக்காட்டியது போல் தீர்வையை செலுத்துவதில் ஆண்டில் ஒரு தடவை செலுத்த வேண்டும் என்றிருந்தாலும் கூட, தீர்வை செலுத்தாமல் இருந்தால் இதை இரண்டு மூன்று தரம் தண்டோரா மூலம் தெரிவிக்கின்ற முறையில் ஏதாவது தெரிவித்துவிட்டால் இதை தீர்த்துவிட முடியும் என்று கருதுகிறேன். ஆகவே இம்மாதிரிப்பட்ட சில சிரமங்களை எல்லாம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, குறிப்பிட்ட இந்த மசோதாவை கொண்டு வருவதற்கு காலதாமதப்படுத்தவேண்டிய அவசியமில்லை என்பதை தெரிவித்து, இவற்றையெல்லாம் துரிதமாக நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பஞ்சாயத்து திருத்த மசோதா மீது சில வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து சட்டத்தில்

எந்தெந்த வகையில் நுழைவுகள் இருக்கின்றன என்பதை ஹைக் கோர்ட்டில் வருகின்ற 1,000, 2,000 ரிட் மனுக்களிலிருந்து தெரிந்து கொள்ள முடிகின்றது. ஹைக்கோர்ட்டில் ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்து கொண்டிருக்கின்றன. 'ஸ்கேல் ப்ரைஸ்க்ரைப்ட்', 'பைஃபர்கேஷன்' 'காரணம் கேட்கவில்லை' என்று இப்படிப்பட்ட பல காரணங்கள் வருகின்றன. மிட்டாய் கடைகளில் ஈ மொய்ப்பது போல் பஞ்சாயத்து தாவா சம்பந்தமாக ஆட்கள் வந்து காத்துக் கொண்டிருக்கிறார்கள் . . .

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ரிட்கள் அதிகமாக வந்திருக் கின்றன என்பதால் சட்டத்தில் ஓட்டைகள் அதிகமாக இருக் கின்றன என்று சொல்லிவிட முடியாது. ஓட்டைகள் இல்லாத வகையிலேயே பல ரிட்கள் வருகின்றன.

திருமதி டி. என். அனந்தநாயகி : அதையும் நான் ஓரளவுக்கு ஒப்புக்கொள்கிறேன். பலவிதத்திலும் ரிட்கள் வந்தால்தான் வக்கீல்களுக்கு பிழைப்பு இருக்கும். ஆகவே கொஞ்சம் வம்புக்கும் பேச வேண்டித்தான் இருக்கிறது. நாம் போடுகின்ற சட்டங்கள் நடைமுறையில் வரும்போது பல கஷ்டங்கள் வருகின்றன. இவற்றையெல்லாம் சட்ட இலாகா நன்றாக ஆலோசித்துப் பார்த்து திருத்தங்களை எல்லாம் கொண்டு வரவேண்டும். நாம் செய்கின்ற சட்டங்களில் சில நேரங்களில் ஏதாவது ஓட்டைகள் விழும்போது அதைப் பயன்படுத்திக்கொண்டு 24 மணி நேரத்திற்குள் ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். இதன் காரணமாக எத்தனையோ தொல்லைகள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதை நாம் பார்க்கின்றோம். ஆகவே பஞ்சாயத்து தேர்தல் இனிமேல் வருவதற்கு முன்பாக என்ன திருத்தங்கள் எல்லாம் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் ஆர அமர இருந்து யோசித்து அதற்கான திருத்தங்களை எல்லாம் கொண்டு வருவதற்கு சட்ட இலாகா நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது கொண்டு வந்திருக் கின்ற மசோதா சாதாரணமானது என்று தோன்றினாலும் இதில் ஆழமான கருத்துக்கள் இருக்கின்றன. இதைப்பற்றியும் நாம் நன்றாக சிந்திக்கவேண்டியிருக்கிறது. வீட்டு வரி (ஹௌஸ் டாக்ஸ்) வசூலிக்கின்ற விஷயத்தில் ஆண்டுக்கு ஒரு முறை வசூல் செய்யலாம் என்றிருக்கிறது. அதற்கான ஷெட்யூலும் மாற்றப் பட்டிருக்கிறது. வரி விதிக்கின்ற விஷயத்தில் மூன்று காரணங்களை அடிப்படையாகக்கொண்டு தீர்மானிக்கவேண்டும் என்றிருக்கிறது. ஒன்று, காப்பிட்டலின் மேல் அதாவது சொத்து மதிப்பின் அடிப் படையில் விதிப்பது, இரண்டு, சொத்தின் ஆன்வல் வால்யூ வின் அடிப்படையில் விதிப்பது, மூன்று, ப்ளிந்த் ஏரியா அதாவது விஸ்தீரணத்தை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிப்பது என்பது பஞ்சாயத்தில் போய் இந்த மூன்று வகைகளை வைக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். மூலதனத்தின் மீது பார்த்து வரி போடலாம், அல்லது அன்யுவல் வால்யூ-வைக் கொண்டு வரி போடலாம், இதில் பெர்சனல் ஆக்குபேஷனாக இருந் தால் சலுகைகள் கிடைக்கும், வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந் தால் வருமானத்திற்கு தகுந்தபடி வரி போடலாம்.

5th November 1965] [திருமதி டி. என். அனந்தநாயகி]

இவ்விதமில்லாமல் மூன்று முறைகளையும் பஞ்சாயத்திற்கு கொண்டு வரவேண்டியது அவசியமில்லை. அதோடு மினிமம், மாக்ஸிமம் இரண்டுக்கும் இடையேயுள்ள இடைவெளியைப் பார்க்கும்போது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. அதாவது ஒரு பஞ்சாயத்தில் 2 சதவிகிதம் என்றால் அடுத்த பஞ்சாயத்தில் 10 சதவிகிதம் என்றிருக்கும், அடுத்த பஞ்சாயத்தில் 20 சதவிகிதம் என்றிருக்கும். இவ்வளவு 'காப்' இருக்கவேண்டிய அவசியமில்லை. இதன் காரணமாக பல விருப்பு வெறுப்புகள் வருவதற்கு இடமிருக்கிறது. ஆகவே இதையெல்லாம் மாற்றி அன்யுவல் வால்யூ என்ற அடிப்படையில் வைத்துவிட்டால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, வரியை வசூலிப்பது ஆண்டுக்கு ஒரு முறையா அல்லது இரண்டு முறையா என்பதை பார்க்கும்போது, நகரங்களில் எல்லாம் இரண்டு முறையில் வசூலிப்பது என்றுதான் இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை என்று வரும்போது, அறுவடை சமயத்தில் ஒரேயடியாக வசூலித்து விடலாம், அதை எப்படியும் சமாளித்துக் கொள்வார்கள் என்று சொல்லக்கூடும். இதை பின்னால் நடைமுறையில்தான் பார்க்கவேண்டும். ஒன்று மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது நடைமுறையில் இந்த வரியை கிராம முன்சீப்கள், கர்ணங்கள் இவர்கள்தான் வசூல் செய்கிறார்கள். அவர்களுக்கு இப்போது வேலை அதிகமாகப் போய்விட்டது இவர்கள் இன்னும் சிறிது அக்கறையோடு வசூல் செய்கின்ற முறையில் நாம் அவர்களுக்கு சிறிது உற்சாகம் காட்டவேண்டும். இவர்களுடைய சம்பளம் மிகவும் குறைவு. ஏதோ ப்ரிஸ்டிஜுக்காக எப்படி இந்த வேலையை விட்டுக் கொடுப்பது என்று இந்த வேலையை தொடர்பாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சம்பளத்தை எல்லாம் பார்க்கும்போது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சில இடங்களில் பஞ்சாயத்து அதிகாரிகள் வசூலிக்கிறார்கள். சாதாரணமாக கிராமத்தில் வரியை யார் அதிகமாக வசூல் செய்து கொடுக்கிறார்களோ அவர்களுக்கு 'ரெட் என்ட்ரி' கொடுக்கப்படுகிறது. 'என்ட்ரி' ரெட்டில் இருந்தால் என்ன, பச்சையில் இருந்தால் என்ன? இருந்தாலும் பின்னால் அவர்கள் தங்கள் சர்விசில் சண்டை போடுவதற்கு வசதியாக இருக்கும். நான் சொல்ல ஆசைப்படுவது பஞ்சாயத்து வரிகளைப் பொறுத்தவரையில், அதிகமாக வரி வசூல் செய்கின்றவர்களுக்கு இன்சென்டிவ் போனஸ் மாதிரி ஏதாவது ஒரு போனஸ் கொடுத்தால் அவர்களுக்கு உற்சாகமாக இருக்கும். அவர்களும் தீவிரமாக வசூலிப்பார்கள். பஞ்சாயத்துக்களில் நெருக்கடியும் தோன்றாது. இதை அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்று. வரியை டிமான்ட் நோட்டீஸ் இல்லாமலேயே கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் வரி கொடுக்கவில்லையென்றால் பின்னால் தேர்தல் போன்ற காரியங்களில் 'டிஸ்க்வாலிபிகேஷன்' ஆகிவிடும். இதனால் பஞ்சாயத்துக்களில் அவர்கள் அங்கத்தினர்களாக வரமுடியாது. இதனால் பல தொல்லைகள் வரலாம். அதற்கெல்லாம் இடமில்லாமல் பார்த்துக் கொள்வது வரவேற்கத்தக்கது. பஞ்சாயத்துக்களில் வருகின்ற சில

[திருமதி டி. என். அனந்தநாயகி] [5th November 1965

பிரச்னைகளைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. பெரிய ஸ்காட் லான்ட் யார்ட் ப்ரெயின் மாதிரி வேலை செய்கிறது. எப்படி போனால் ஒருவரை இந்த பதவியிலிருந்து நீக்கலாம், எந்தமாதிரியான நெருக்கடியை கொண்டு வரலாம் என்பதற்கெல்லாம் திட்டங்கள் போடப்பட்டிருப்பதைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இப்படிப்பட்டவர்களைப்பற்றி கேட்டால், ஏதோ படிப்பு இல்லை, கைநாட்டு தான் என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு பஞ்சாயத்தை எப்படி நடக்காமல் பார்த்துக்கொள்வது என்றால் அவர்களுக்கு அதற்கான வழிகள் எல்லாம் தெரியும். நோட்டீஸ் அனுப்பாமல் இருந்துவிட்டு, அனுப்பியது போல் ரிக்கார்டுகளை வைத்துக்கொள்வது, பின்னால் டிஸ்க்வாலிபிகேஷன் செய்வது, பாக்கியில்லாதவர்களிடத்தில் பாக்கியை ஏற்படுத்துவது, எந்த விதத்தில் நாமினேஷனை சக்தி இல்லாமல் செய்யலாம் என்பதில் எல்லாம் மிக அக்கரையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கும்பல்கள் வேலைகள் செய்து கொண்டிருந்தால் நிச்சயமாக பல தொல்லைகள் தான் ஏற்படும். ஆனால் வரிகள் கொடுக்கவேண்டியவர்கள் இருந்தால், தண்டோரா அல்லது வெட்டியான்கள் மூலமாக தெரிவித்தால் சில தொல்லைகள் இராது என்று நம்புகிறேன். இம்மாதிரிப்பட்ட திருத்தங்களும் தேவை தான். ஏனென்றால் ஒழுங்காக வரி கொடுக்காதவர்கள் பஞ்சாயத்துக்களில் வந்தாலும் நாட்டுக்கு நன்மை கிடையாது. ஆகவே இப்பேர்ப்பட்ட விஷயத்தில் அரசாங்கம் தயங்காது தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: Further discussion on the Bill will be continued to-morrow.

1-30 p.m. The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

The House then adjourned.

V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory Rules and Orders.

295. *Notification issued with G.O. Ms. No.* 2071, *Rural Development and Local Administration, dated the* 18th *September* 1965 *declaring that with effect on and from* 1st *October* 1965, *the area specified in the schedule of the notification shall be a township called the "Ambattur Township"* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act,* 1958 (*Madras Act XXXV of* 1958).]

B. Reports, notifications and other papers.

'*Nil*'.